புதினம்? தெரியுமோ

# சுடர் ஒளி

THE SUDAR OLI

Registered as Newspaper

සුඩර් ඔළි

17.06.2020 புதன்கிழமை


அரசியல் களம் மெல்ல மெல்ல சூடு பிடிக்கின்றது. அரசியல் கட்சிகளும், அரசியல்வாதிகளும் வெற்றிக்காக பல்வேறு வியூகங்களை அமைத்துப் பரப்புரைகளை முன்னெடுக்கின்றனர். சிலர் நேர் வழியிலும், வெகு சிலர் குறுக்கு வழியிலும் வெற்றிக்காக முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர். அதிகாரத் தரப்பினர் அதிகாரிகளை மிரட்டி, தேர்தல் விதிமுறைகளை சாவகாசமாக மீறி தமக்கான வெற்றி வாய்ப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முயல்வார்கள். அப்படியானதொரு முயற்சி யாழ்ப்பாணத்திலும் நடக்கின்றது. யாழ். மாவட்டத்தில் உள்ள ஒவ்வொருவரின் தரவுகளும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் கணினிமயப்படுத்தப்பட்டு சேமிக்கப்பட்டுள்ளன. அந்த விவரங்கள் அரசியல்வாதிகளுக்கு கிடைத்தால் ஒவ்வொரு வீட்டுக்கும் அழைப்பெடுத்து, குடும்ப விவரங்களைச் சொல்லி மக்களை குளிர்வித்து வாக்குக் கேட்கலாம்.

2

## யாழ்ப்பாணத்தில்

# மணல் விநியோகம் மீண்டும் தனியாரிடம்?

## பின்னணியில் அரசியல் கட்சி எதிர்த்து இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்ப்பாண மாவட்டத்தின் மணல் விநியோகத்தை மீண்டும் தனியாரிடம் ஒப்படைப்பதற்கான நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை காலமும் பாரவூர்திச் சங்கம் ஊடாக மணல் விநியோகம் இடம்பெற்றுவந்த நிலையில் தற்போது தனியார் நிறுவனம் ஊடாக அதனைச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

2

"மணல் விலை தாறுமாறாக அதிகரிக்கலாம்"

## பாரவூர்தி உரிமையாளர் சங்கத்துக்கு அனுமதி

பிரதேச செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

மணல் விநியோகத்துக்கான அனுமதி பாரவூர்தி உரிமையாளர் சங்கத்துக்கே வழங்கப்பட்டுள்ளது என்று மருதங்கேணி பிரதேச செயலர் கே.பிரபாகரமூர்த்தி தெரிவித்தார்.

மணல் விநியோகத்தில் தனியார் நிறுவனம் ஒன்று ஈடுபட முனைந்த நிலையில் உள்ளூர்

2

## பருத்தித்துறையில் மணல் அகழ்வுக்கு தனியார் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

மணல் அகழ்வுக்கான அனுமதிகோரி தனியார் ஒருவர் பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு அண்மையில் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளதாகத் தெரியவருகின்றது. மணல் அகழ்வுக்கான அனுமதி 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்துடன், பொது அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டது. இது தொடர்பான தீர்மானமும் யாழ்ப்பாண மாவட்டச் செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிலையில் தற்போது

2

## கொரோனா: இலங்கைக்கு 100ஆவது இடம்

கொழும்பு, ஜூன் 17

கொரோனாத் தொற்று ஏற்பட்ட நாடுகளின் தரவரிசையில் இலங்கை 100 ஆவது இடத்தில் உள்ளது. இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 915 ஆக அதிகரித்துள்ளது. தொற்றுக்குள்ளான 552 பேர் சிகிச்சைபெற்று வருகின்றனர். தொற்றுக்குள்ளான 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

2



## அனைத்து மதங்களையும் சமமாக மதிப்பவர்களாம்!

இப்படிச் சொல்கிறார் பாதுகாப்புச் செயலர்

கொழும்பு, ஜூன் 17

நாங்கள் எந்தவொரு நேரத்திலும் இன, மத, மொழி வேறுபாடுகளை பார்த்தது கிடையாது. பௌத்த விகாரைகள், கிறிஸ்தவ தேவாலயங்கள்,

2

## இ.தொ.கா.வின் பொதுச் செயலாளரானார் ஜீவன் தொண்டமான்

கொழும்பு, ஜூன் 17

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளராக மறைந்த ஆறுமுகன் தொண்டமானின் மகனான ஜீவன் தொண்டமான் நியமிக்கப்

2

## வெளிமாவட்டத்தவர் கடலட்டை பிடிப்பதற்கு அனுமதி வழங்கிய ஆலயம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

வடமராட்சி கிழக்கில் வெளிமாவட்ட மீனவர்கள் கடலட்டை பிடிப்பதற்கான அனுமதியை அந்தப் பிரதேசத்திலுள்ள புனித உத்தரிய மாதா ஆலயம் வழங்கியுள்ளது.

அனுமதிமூலம் கிடைக்கும் நிதியை ஆலய மறுசீரமைப்புக்குப் பயன்படுத்தவுள்ளதாக ஒப்புதல் கடிதம்

2

## பயிலுநர் செயற்றிட்ட உதவியாளர் நியமனத்தை மீள வழங்குங்கள்

மாவட்டச் செயலரிடம் மனு

யாழ்ப்பாணம், ஜூன் 17

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட பயிலுநர் செயற்திட்ட உதவியாளர் நியமனத்தை மீள வழங்குமாறு கோரி ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவுக்கு

2



சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

# மணல் விநியோகம்...

மணல் விநியோக நடவடிக்கையில் தனியார் ஈடுபடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வடமராட்சி கிழக்கில் உள்ள உள்ளூர் பாரவூர்தி உரிமையாளர்கள் இன்று காலை போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த விவகாரம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் மணல் விநியோகம் தனியார் நிறுவனத்திடமிருந்தது. அந்த நிறுவனம் அரசியல் கட்சியின் பின்புலத்தில் இயங்கியதாக பல்வேறு தரப்புக்களும் தெரிவித்திருந்தன.

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் வடமராட்சி கிழக்குப் பகுதியில் மணல் அகழ்தல் மற்றும் விநியோகம் என்பன குறித்த தனியார் நிறுவனத்தி டமிருந்து பிடுங்கப்பட்டது. வடமராட்சி கிழக்கில் மணல் அகழ்வதற்கான அனுமதி அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு வழங்கப்பட்டது. அதேபோன்று விநியோகத்துக்கான அனுமதி பாரவூர்தி உரிமையாளர் சங்கத்துக்கு வழங்கப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையில் கொரோனா அச்சம் காரணமாக மணல் அகழ்வு மற்றும் விநியோக நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. அவை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்போது பாரவூர்த்தி உரிமையாளர் சங்கத்தின் வாகனங்களுக்குப் பதிலாக, தனியார் நிறுவனம் ஒன்றின் வாகனங்களே மணல் விநியோக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. முன்னர் மணல் விநியோகத்தில் ஏகபோக உரிமையைக் கொண்டிருந்த அரசியல் கட்சி ஒன்றின் பின்புலத்திலேயே, மேற்படி தனியார் நிறுவனம் மணல் விநியோகத்தை தற்போது மேற்கொள்ள ஆரம்பித்ததாக உள்ளூர் பாரவூர்தி உரிமையாளர்கள் குற்றம் சுமத்தினர்.

தனியார் நிறுவனத்தின் பாரவூர்திகளில் மணல் ஏற்றிச்செல்ல அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்து, அவர்கள் இன்று காலை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாரவூர்திகளையும் உள்ளே அனுமதிக்கவில்லை. இது தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டது. அத்துடன் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலருடனும் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

தனியார் பாரவூர்திகளில் மணல் ஏற்றிச்செல்ல அனுமதிக்க முடியாது என்றும், பாரவூர்தி சங்கமும், உள்ளூர் பாரவூர்தி உரிமையாளர்களுமே மணல் விநியோகத்தில் ஈடுபடலாம் என்றும் போராட்டக்காரர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். நாளைமறுதினம் வெள்ளிக்கிழமைக்கு இடையில் இந்த விடயத்துக்கு தீர்வு காணப்படவேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ,5,20)

## பாரவூர்தி...

பாரவூர்தி உரிமையாளர்களின் எதிர்ப்பால் அது நிறுத்தப்பட்டது. இந்த நிலையில் மணல் விநியோகத்துக்கான உரிமை இதுவரை காலமும் பாரவூர்தி உரிமையாளர் சங்கத்துக்கு இருந்த நிலையில் அது தனியாருக்கு மாற்றி வழங்கப்பட்டுள்ளதா என்று மருதங்கேணி பிரதேச செயலரிடம், உதயன் வினவியது.

'பிரதேச செயலகத்தால் பாரவூர்தி உரிமையாளர் சங்கத்துக்குத்தான் மணல் விநியோகத்துக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பாரவூர்தி சங்கம் தமது அனுமதியில் தனியாரின் பாரவூர்திகளை மணல் ஏற்றுவதற்கு அனுமதி வழங்கினார்களோ தெரியாது' என்று பிரதேச செயலர் குறிப்பிட்டார். (ஓ,5)

## பருத்தித்துறையில்....

மணல் அகழ்வுக்கான அனுமதி வழங்கக்கோரி தனியார் ஒருவர் பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு விண்ணப்பித்துள்ளார். பருத்தித்துறை பிரதேச செயலரால் விண்ணப்பம், கனிய வளங்கள் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டது. கனிய வளங்கள் திணைக்களம், யாழ்ப்பாண மாவட்டச் செயலரின் பரிந்துரையைக் கோரி விண்ணப்பத்தை அனுப்பி வைத்தது.

இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில், தனியாருக்கு அனுமதி வழங்கக்கூடாது என்று பெரும்பாலான அதிகாரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஆனாலும் இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்று தெரியவருகின்றது. கடந்த காலங்களில் அரசியல் கட்சி ஒன்று மணல் அகழ்வு மற்றும் விநியோகம் என்பவற்றை ஏக போகமாகக் கொண்டிருந்தது. அது 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்துடன் இல்லாதொழிக்கப்பட்டது. தற்போது அது மீண்டும் துளிர்விட ஆரம்பிக்கின்றதா என்று சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. (ஓ,5)

## பொதுச் செயலாளரானார்...

பட்டுள்ளார். பொதுச் செயலாளர் பதவியை வகித்த அனுஷியா சிவராஜாவுக்கு உப தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை, பேராளர் மாநாடு, நிர்வாக சபை ஆகியன நேற்று செவ்வாய்க்கிழமை காலை கொட்டகலையிலுள்ள தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்தில் கூடியன. விரிவாக கலந்துரையாடிய பின்னரே மூன்று கட்டமைப்புகளும் இணைந்து இந்தப் பதவிகளை வழங்கின. அதேவேளை, பொதுத்தேர்தல் முடிவடைந்த பின்னரே இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கு புதிய தலைவர் நியமிக்கப்படுவார் என்று அந்தக் கட்சியின் உறுப்பினர் மருதபாண்டி ரமேஷ்வரன் தெரிவித்தார். (ஐ-44)

## கொரோனா:....

கொரோனா பாதிப்புக்கள் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை 100 ஆவது இடத்தை அடைந்துள்ளது. கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததை அடுத்தே இலங்கை இந்தப் பட்டியலின் 100 நாடுகளுக்குள் வந்துள்ளது.

இந்தப் பட்டியலின் முதலிடத்தில் அமெரிக்காவும், இரண்டாவது இடத்தில் பிரேஸிலும், மூன்றாவது இடத்தில் ரஷ்யாவும், நான்காவது இடத்தில் இந்தியாவும், ஐந்தாவது இடத்தில் பிரிட்டனும் உள்ளன. (ஐ-2)

## கடலட்டை....

வழங்கப்பட்டுள்ளது. கடிதத்தில் ஆலயப் பொருளாளரும், பங்குத் தந்தையும் ஒப்ப மிட்டுள்ள னர். வெளிமாவட்ட மீனவர்கள் வடமராட்சிப் பகுதியில் கடலட்டை பிடிப்பதற்கு கிளிநொச்சி நீதிமன்றம் தடை விதித்திருந்தது. மேலும் உள்ளூர் மீனவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னர், வெளிமாவட்ட மீனவர்கள் கடலட்டை பிடிப்பதற்கு எதிராகப் போராட்டமும் நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ,5,105)

## அனைத்து ...

இந்துக் கோவில் கள், முஸ்லிம் பள்ளிகள் என்று அனைத்தையும் சமமாகவே மதிக்கின்றோம். போர்க் காலத்திலும் கூட நாங்கள் போர் இடம்பெற்ற பகுதிகளில் உள்ள கோவில்கள், தேவாலயங்கள் உள்ளிட்ட மத வழிபாட்டு தலங்கள் அமைந்துள்ள சூழலுக்கு மாமிச உணவுகளை அனுமதித்தது கிடையாது. அந்தளவுக்கு நாங்கள் அனைத்து மதங்களுக்கும் மரியாதை செலுத்து கின்றோம்.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார். பாதுகாப்பு அமைச்சில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவால் பாதுகாப்பு செயலரான எனது தலைமையில் இரண்டு ஜனாதிபதி செயலணிகள் உருவாக்கப்பட்டன. அதில் ஒன்று, கிழக்கில் உள்ள தொல்பொருள்களை அடையாளம் கண்டு பாதுகாப்பதற்கான ஜனாதிபதி செயலணியாகும். சுமார் ஆயிரத்துக்கும் அதிகமான தொல்பொருள் சின்னங்கள் கிழக்கில் உள்ளன. அவற்றின் நிலைமையைக் காணும்போது, மிகவும் சோகத்துக்கு உரியதாகவே உள்ளது. எமது முன்னோர்கள் விட்டுச்சென்ற அடையாளங்கள் இவை. இவற்றைச் சேதப்படுத்தல் அல்லது அழிப்பது என்பது முன்னோர்களை அவமதிக்கும் செயலாகும். எனவே இவற்றை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான தொல்பொருள்கள் அழிக்கப்படுவதை அல்லது சிதைக்கப்படுவதை பார்த்துக்கொண்டிருக்க முடியாது. எனவேதான் அதனை பாதுகாக்க ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டது. இந்தச் செயலணியை உருவாக்கும் போது, அதில் இன, மத, மொழி பாகுபாடுகள் பார்க்கப்படவில்லை. துறைசார் நிபுணர்களே உள்ளடக்கப்பட்டுள்ளனர், என்றார். (ஓ,5)

## இலங்கை வந்த ஈரானியர்கள் மூவருக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு, ஜூன் 17

கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள இலங்கை வந்த ஈரானியர் மூவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. உமாஓயா திட்ட கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்காக இலங்கைக்கு வந்த ஈரானியர்கள் 85 பேரிடம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் மூவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளதாக தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார். (ஐ)

## புதினம் தெரியுமோ?

**இதனால் தான் என்னவோ இந்தத் தரவுகளை அரசியல்வாதி ஒருவர் அதில் குறி வைத்துள்ளார். அவரின் அல்லக்கையான மாவட்டச் செயலகத்தின் 'உயர்ந்த அதிகாரி' ஊடாக இதனைச் செயற்படுத்தியுள்ளார். எங்கேயும் அருமருந்தாக ஒரு சில நேர்மையான அதிகாரிகள் இருப்பார்கள். அப்படிப்பட்ட அதிகாரிகளால், குறித்த அரசியல்வாதி எதிர்பார்த்த விடயத்தை ஒப்பேற்ற முயன்ற 'உயர்ந்த அதிகாரி'க்கு அப்படிப்பட்ட நேர்மையான அதிகாரிகளால் சில பல தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன.**

**அந்தக் கோபதாபத்தில் 'உயர்ந்த அதிகாரி' தனது வழமையான கைவரிசையைக் காட்ட முனைந்துள்ளார். நேர்மையான அதிகாரிகளின் கோப்புக்களை தோண்டியெடுத்து எங்கேயாவது பிழை பிடிக்கலாமா என்று முயன்று வருகின்றார்.**

**அரசியல்வாதிக்கு விசுவாசம் காட்டுவதற்கு இப்படிக்கு குத்தி முறிவதில் ஒரு சதவீதம் தனது வேலையில் காட்டினால் நிர்வாகம் கொஞ்சமாவது சிறப்பாக இருக்கும்.**

பட்சி

# தேர்தல் ஆணைக்குழுவை விமர்சிக்க முடியாது

**கோத்தாபய, ஆணைக்குழுவினரிடம் நேரில் தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், ஜூன் 17
தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை எவரும் விமர்சிக்கமுடியாது. ஆணைக்குழு உறுப்பினர்கள் சுயாதீனமாக சுதந்திரமாக தங்களது பணிகளை ஆற்றலாம். அதற்குரிய முழுமையான ஒத்துழைப்பு என்னால் வழங்கப்படும். இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கும், ஜனாதிபதி கோத்தாபயவுக்கும் இடையிலான சந்திப்பு இன்று மாலை 4 மணியிலிருந்து 5.30 மணி வரை நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
நாடாளுமன்றத் தேர்தலை மிகவும் நேர்மையாக நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு எடுக்கின்ற சகல நடவடிக்கைகளுக்கும் நான் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவேன். அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். தேர்தல் காலத்தில் ஆணைக்குழு உறுப்பினர்கள் தொடர்பிலோ, தேர்தல்கள் ஆணைக்குழு தொடர்பிலோ எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களும் விமர்சனங்களை முன்வைக்க முடியாது. ஆணைக்குழு தொடர்பிலோ, ஆணைக்குழு உறுப்பினர்கள் தொடர்பிலோ விமர்சனங்கள் இருந்தால் கட்சித் தலைவர்களிடம் தெரிவிக்கலாம். அதைவிடுத்து பொதுவெளியில் விமர்சிக்க முடியாது. தேர்தல்கள் ஆணைக்குழு சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும் தனது பணியை ஆற்ற வேண்டும், என்று கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ஓ,5,105)

# கம்பரெலியா பதாகைகள் இனி மறைக்கப்படும்

## மாவட்டச் செயலர் மகேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17
யாழ்ப்பாணத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள கம்பரெலிய பதாகைகளில் உள்ள அரசியல்வாதிகளின் படங்களை மறைப்பதற்கு பொலிஸார் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வேட்பாளர்கள் கொரோனாத் தாக்கத்தைக் கருத்தில் கொண்டு செயற்படுமாறு தேர்தல் திணைக்களத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பதாகைகள் பொது இடங்களில் காணப்பட்டால் அவற்றை உடனடியாக அகற்றுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. கம்பரெலிய திட்டத்தின் ஊடாக யாழ்ப்பாண மாவட்டத்தில் நடப்பட்டுள்ள பதாகைகளில் உள்ள அரசியல்வாதிகளின் படங்களை ஸ்ரிக்கர் ஊடாக மறைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் பொதுமக்கள் பயன்படுத்தும் வீதிகளில் வேட்பாளர்களின் பெயர்கள், கட்சியின் சின்னம் ஆகியன வரையப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இந்தச் செயற்பாடானது முற்றிலும் தேர்தல் சட்டத்துக்கு முரணான செயற்பாடாகும். அவ்வாறான செயல்களில் ஈடுபடுவோர் மீது தேர்தல் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும், என்றார்.

**வன்முறைச் சம்பவம் பதிவு**

'தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் இன்று வரை 15 தேர்தல் விதி மீறல் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றில் பெரும்பாலான முறைப்பாடுகள் தேர்தல் சட்டவிதிகளை மீறியமை தொடர்பானது. எனினும் ஒரேயொரு தேர்தல் வன்முறை சம்பவம் பதிவாகியுள்ளது. தென்மராட்சியில் இடம்பெற்ற தனியார் ஊடக நிறுவனம் மீதான தாக்குதல் சம்பவமே அதுவாகும்' என்று யாழ்ப்பாண உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கி.அமல்ராஜ் தெரிவித்தார். (ஓ,5,111)

# உணவு ஒறுப்பால் முருகன் பாதிப்பு



கொழும்பு, ஜூன் 17
இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, தமிழகத்தின் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள முருகன் இரு வாரங்களுக்கு மேலாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
28 ஆண்டுகளாக வேலூர் மத்திய சிறையில் சிறை வைக்கப்பட்டுள்ள முருகன், கடந்த முதலாம் திகதி தொடக்கம் சிறையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார் என்று இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.
"வேலூர் பெண்கள் கிளைச் சிறையில் சிறைவைக்கப்பட்டுள்ள அவருடைய மனைவி நளினியுடன் காணொலி வழியாக உரையாட அனுமதி மறுக்கப்படுகிறது என்றும் கடந்த மாதம் இலங்கையில் உயிரிழந்த தனது தந்தையின் உடலை காணொலி வழியாக பார்க்கவும் அனுமதி வழங்கவில்லையாதலால் முருகன் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்" என்று அவருடைய சட்டத்தரணி புகழேந்தி தெரிவித்துள்ளார்.
தற்போது முருகனின் உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ளது. அவருக்கு குளுக்கோஸ் செலுத்தி சிறை மருத்துவக்குழுவினர் கண்காணித்து வருகின்றனர்.
இதேவேளை, வேலூர் மத்திய சிறையிலுள்ள முருகனும், பெண்கள் சிறையிலுள்ள அவரது மனைவி நளினியும் தங்களுக்கு சிறையில் பல்வேறுவிதமான நெருக்கடிகள் அளிக்கப்படுவதாக ஏற்கனவே பலமுறை குற்றம்சாட்டியிருந்தனர்.
தங்களை புழல் சிறைக்கு மாற்றுமாறு அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இதுதொடர்பாக பலமுறை உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனரெனினும், கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்றும் இந்திய ஊடகம் குறிப்பிட்டுள்ளது. (து)

# பயிலுநர் செயற்றிட்ட...

யாழ்ப்பாண மாவட்டச் செயலர் ஊடாக மனு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பயிலுநர் செயற்றிட்ட உதவியாளர்கள் ஒன்றுகூடி ஜனாதிபதிக்கான மனுவை யாழ்ப்பாண மாவட்டச் செயலரிடம் இன்று மதியம் கையளித்தனர்.
அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
நாடு முழுவதும் பயிலுநர் செயற்றிட்ட உதவியாளர் விண்ணப்பங்கள் கோரப்பட்டு பிரதமரின் அலரி மாளிகையில் ஆனி மற்றும் ஆவணி மாதங்களில் இரண்டு நேர்முகத்தேர்வுகள் இடம்பெற்றன. புரட்டாதி மாதம் 16ஆம் திகதி பயிலுநர் செயற்திட்ட உதவியாளர் நியமனத்துக்கு 6 ஆயிரத்து 547 பேர் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.
தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளினது பெயர்ப் பட்டியல் நாடு முழுவதிலுமுள்ள மாவட்டச் செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அனைவரும் தமது மாவட்ட செயலகங்களுக்குச் சென்று வரவு இடாப்பில் கையொப்பம் இட்டு வந்தோம். மாவட்ட செயலகங்களால் பிரதேச செயலகங்களுக்கு சில நியமனதாரிகள் கடமையைப் பொறுப்பேற்குமாறு அனுப்பிவைக்கப்பட்டனர். கையொப்பமிட்டு கடமைகளைப் பொறுப்பேற்றிருந்த நிலையில் செப்ரெம்பர் மாதம் 18ஆம் திகதியன்று ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டிருப்பதனால் 23ஆம் திகதியன்று தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரியவால் தற்காலிகமாக நியமனங்கள் இடைநிறுத்தப்படுவதாக அனைத்து மாவட்ட செயலகங்களுக்கும் தொலைநகல் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் செப்ரெம்பர் 18ஆம் திகதி தேர்தல் அறிவிக்கப்பட்ட திகதியாகவும், நியமனம் வழங்கப்பட்ட திகதியாக செப்ரெம்பர் 16ஆம் திகதியும் அமைந்திருந்தன. ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்த பின்னர் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட எங்களது பணிகளை மீளத் தொடர்வதற்கு பணியகங்களுக்குச் சென்றிருந்தோம். தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவரால் எமது நியமனம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தற்காலிக தடை நீக்கப்பட்டு மீண்டும் பணிக்கு அமர்த்துமாறு தொலைநகல் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இருப்பினும் குறித்த அமைச்சால் இந் நியமனம் பற்றி ஒரு தகவலும் வழங்கப்படவில்லை எனக் கூறப்பட்டது. பின்னர் இந் நியமனத்தை தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்வதாக நிதியமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.
இந்த நியமனத்தை வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் கடிதம் மூலமும் ஊடக சந்திப்புக்களின் மூலமும் அரசுக்கு வலியுறுத்தியிருந்தார். ஆனால் அரசிடமிருந்து எந்தவொரு பதில்களும் எங்களுக்கு கிடைக்கவில்லை. 6 ஆயிரத்து 547 பேரின் வாழ்க்கை மிகவும் கவலைக்கிடமாகியுள்ளது. சுமார் 8 மாதங்களாக வேலையின்றி எமது வாழ்வாதாரத்தை இழந்து நடுவீதியில் நிற்கின்றோம்.
அமைச்சால் நியமனம்பெற்ற நாங்கள் உங்களது கண்காணிப்பின் கீழ் எமது மாவட்ட செயலகங்களுக்கு சேவைக்காக நியமிக்கப்பட்டும் இன்று வரை சேவையைத் தொடர முடியாது உள்ளோம். தொழிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் எங்களினதும், எங்கள் குடும்பங்களினதும் எதிர்பார்ப்பு நிறைவேறும் வகையில் இதனைப் பெற்றுத் தருவதற்கு எமது மாவட்ட செயலராகிய நீங்கள் குறித்த அமைச்சுடன் தொடர்புகளை மேற்கொண்டு எமக்கு தகுந்த தீர்வைப் பெற்றுத்தரும் வகையில் ஆவன செய்து தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்- என்றுள்ளது. (ஓ,5,20)

# ஒரு சிலரின் செயற்பாடுகளை வைத்து கூட்டமைப்பை எடைபோட வேண்டாம்

## போட்டுத் தாக்குகிறார் சாள்ஸ் நிர்மலநாதன்

கொழும்பு, ஜூன் 17

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒரு சில நபர்கள், அல்லது மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு சில பிரதிநிதிகளின் செயற்பாடுகளை வைத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒட்டுமொத்தமாகப் பிழை செய்கின்றது என்று, யாரும் எடுத்துக்கொள்ளவேண்டாம். கூட்டமைப்பில் உள்ள ஒரு சிலரின் கருத்துக்களைக் கூட்டமைப்பின் கருத்துக்களாக ஏற்றுக் கொள்ளவேண்டாம். எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் தமது ஆதரவுகளை தொடர்ந்தும் வழங்கவேண்டும் என்று வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு கனகரத்தினபுரம் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியாக கௌரவமான ஒரு வாழ்க்கையை ஏற்படுத்துவதற்கும், எங்களுடைய மக்கள் தமது சொந்த இடங்களில்



வாழ்வதற்காகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பயணித்துக் கொண்டிருக்கின்றது.

2009ஆம் ஆண்டுக்கு முன்பும், பிற்பாடும் பெரும்பாலான தமிழ் மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்களித்து வரு கின்றனர்.

ஆனால் தற்போதைய சூழ்நிலையில் தமிழர்களின் தனித்துவத்தையும், தமிழர்களின் தனித்துவமான கட்சியையும் உடைப்பதற்காக, எமது பகுதிகளில் பல தேசியக் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் களமிறக்கப்பட்டுள்ளன. அவ்வாறு அவர்கள் களமிறக்கப்பட்டிருப்பது வெல்வதற்காக அல்ல. தமிழர்களின் வாக்குகளைச் சிதறடிப்பதற்காகவே ஆகும்.

தமிழர்கள் நாங்கள் தனித்துவமாகப் பயணிக்க வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது. நிச்சயமாக நாம் ஒரே நிலைப்பாட்டில் இருக்கவேண்டிய பொறுப்பும் இருக்கின்றது. எமக்கு மக்களால் தரப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் எம்மால் முடிந்த பங்களிப்பை நாம் செய்து வருகின்றோம். தொடர்ச்சியாக உங்களுடைய பங்களிப்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்கு இருக்க வேண்டும் என் பதே என்னுடைய கருத்தாக இருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒரு சில நபர்கள், அல்லது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு சில பிரதிநிதிகளின் செயற்பாடுகளை வைத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒட்டுமொத்தமாகப் பிழை செய்கின்றது என்று யாரும் எடுத்துக்கொள்ள வேண்டாம்.

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு என்பது தமிழர்களினுடைய விடுதலைக்காக உருவாக்கப்பட்டு, அதற்காகவே பயணிக்கின்ற ஓர் ஜனநாயக அமைப்பாகும். ஆகவே கூட்டமைப்பில் உள்ள ஒரு சிலரின் கருத்துக்களைக் கூட்டமைப்பின் கருத்துக்களாக ஏற்றுக் கொள்ள வேண்டாம். தமிழ் மக்கள் தொடர்ந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமது ஆதரவுகளை வழங்க வேண்டும்- என்றார். (ஒ,5,246)

---

மாநகர சபையின்

# 34 லட்சம் ரூபாவை விழுங்கியது மின்கட்டணம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான நிலத்தில் அமைக்கப்படும் கலாசார மண்டபத்துக்கான மின்சாரக் கட்டணமான 34 லட்சத்து 26 ஆயிரத்து 751 ரூபா 25 சதத்தை மாநகரசபை செலுத்தியுள்ளது. 2016ஆம் ஆண்டிலிருந்து 2019ஆம் ஆண்டு வரையிலான மின்சாரக் கட்டணமே செலுத்தப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு 2 லட்சத்து 38 ஆயிரத்து 748 ரூபா 25 சதமும், 2017ஆம் ஆண்டு 6 லட்சத்து 26 ஆயிரத்து 452 ரூபா 85 சதமும், 2018ஆம் ஆண்டு 9 லட்சத்து 61 ஆயிரத்து 294 ரூபா 65 சதமும், 2019 ஆம் ஆண்டு 16 லட்சத்து 257 ரூபா 98 சதமும் செலுத்தப்பட்டுள்ளது. இதுவரை 34 லட்சத்து 26 ஆயிரத்து 751 ரூபா 25 செலுத்தப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து மாதாந்த மின்சாரக் கட்டணம் 10 லட்சம் ரூபாவை அண்மிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,5,105)

---

# சந்திரகுமாரின் சுவரொட்டிகளுடன் கரவெட்டியில் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் சுயேச்சைக் குழுவில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவான தேர்தல் சுவரொட்டிகளுடன் மூவர் நேற்று கைதுசெய்யப்பட்டனர்.

கரவெட்டிப் பகுதியில் வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை சந்தேகநபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டனர் என்று நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், வேட்பாளருமான முருகேசு சந்திரகுமாரின் 270 தேர்தல் சுவரொட்டிகள் மற்றும் முச்சக்கரவண்டி ஒன்றும் கைப்பற்றப்பட்டன. தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட் டின் கீழ் பருத்தித்துறை நீதிமன்றில் சந்தேகநபர்களை முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

---

# மாநகரசபை கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீ அணைப்பு வீரர் ஒருவர் கடமை நேரம் உயிரிழந்தமையால் நாளை வியாழக்கிழமை இடம்பெறவிருந்த சபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2020 ஆம் ஆண்டின் 6ஆம் மாதப் பொதுக் கூட்டம் நாளை இடம்பெற இருந்தது. கூட்டத்துக்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு நிகழ்ச்சி நிரலும் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

இருந்தபோதும் தீ அணைப்பு வீரரின் இறுதிக் கிரியைகளும் நாளை நடைபெறவுள்ளமையால் அவருக்கு மதிப்பளிக்கும் வகையில், நாளை நடைபெறவிருந்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஒ,5,105)

---

வன்னித் தேர்தல் தொகுதி

# வேட்பாளர்கள் கூட்டம் தொடர்பில் குழப்பம்

வவுனியா, ஜூன் 17

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் போட்டியிடுகின்ற வன்னி மாவட்ட வேட்பாளர்களுக்கு கூட்டம் நடைபெறவிருந்த நிலையில், அந்தக் கூட்டம் நடைபெறாது என ஏனைய வேட்பாளர்களுக்கு தெரியப்படுத்தி விட்டு முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப. சத்தியலிங்கம் நடத்தியுள்ளார் என்று குற்றம் சுமத்தப்படு கின்றது.

கூட்டத்தில் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜாவும் கலந்து கொண்டிருந்தனர்.

தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரின் பிரசன்னத்துடன் வவுனியாவில் உள்ள தமிழ் அரசுக் கட்சி அலுவலகத்தில் கூட்டமைப்பில் போட்டியிடும் வேட்பாளர்களுடனான சந்திப்பு ஏற்பாடாகியிருந்தது.

இந்தச் சந்திப்பில் எம்.ஏ.சுமந்திரன் கலந்து கொள்வதை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் எதிர்திருந்தார். இதனையடுத்து கூட்டம் நடைபெறாது என்று அனைத்து வேட்பாளர்களுக்கும் சத்தியலிங்கம் தெரியப்படுத்தியிருந்தார்.

அதன் பின்னர் தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவாளர்களை அழைத்து கூட்டத்தை சத்தியலிங்கம் நடத்தியுள்ளார் என்று குற்றம் சுமத்தப்படுகின்றது.

தமிழ் அரசுக் கட்சியின் ஏனைய வேட்பாளர்களைப் புறக்கணித்து வவுனியா கிளையை அழைத்து ப.சத்தியலிங்கம் கூட்டத்தை கூட்டியமை தொடர்பிலேயே குற்றம் சுமத்தப்படுகின்றது. இதேவேளை, இந்தக் கலந்துரையாடலுக்கு தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனுக்கும் அழைப்பு விடுக்கப்படப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-18)

---

அம்பான் புயல் பாதிப்பு

# முல்லையில் 75 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபா

முல்லைத்தீவு, ஜூன் 17

முல்லைத்தீவு மாவட்டத்தில் அம்பான் புயலால் பாதிக்கப்பட்ட 75 பேருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அம்பான் புயல் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 75 வீடுகள் சிறு சேதமும் 6 வீடுகள் பகுதியளவில் சேதமும் அடைந்தன. சேதமடைந்த வீடுகள் தொடர்பில் மாவட்டச் செயலகம் மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம் 75 வீடுகளுக்கு ஏற்பட்ட சேதம் தலா 10 ஆயிரம் ரூபா என்று மதிப்பிடப்பட்டது. மேலும் 6 வீடுகளுக்கான சேதங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டது. அந்த மதிப்பீடு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில் விரைவில் அந்த நிதியும் கிடைக்கும் என்று மாவட்டச் செயலக அதிகாரி தெரிவித்தார். (ஒ,5,105)

# இலங்கை மத்திய வங்கி அரசை அசௌகரியத்துக்குள்ளாக்குகிறது

## அதிகாரிகளுடன் சீறிப்பாய்ந்த கோத்தாபய

கொழும்பு, ஜூன் 17

என்னைக் கஷ்டத்துக்கு உள்ளாக்குவதோடு, அரசை அசௌகரியத்துக்கும் உள்ளாக்குகின்றீர்கள் என்று மத்திய வங்கி அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கும், மத்திய வங்கி அதிகாரிகளுக்குமிடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போது இவ்வாறு தெரிவித்துள்ளார் என்று ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சுகாதாரப் பிரச்சினையை பொருளாதாரப் பிரச்சினையாக மாற்றுவதற்கு இடமளிக்க முடியாது. பெரிய நாடுகள் மட்டுமன்றி சிறிய நாடுகளின் மத்திய வங்கிகள்கூட பெரும் நடவடிக்கைகளை எடுக்கின்றன. அமெரிக்காவின் பெடரல் வங்கி 600 பில்லியன் அமெரிக்க டொலரை இந்த நிகழ்ச்சித் திட்டத்துக்கு வழங்குகின்றது. ஆஸ்திரேலியாவும் ஜப்பானும் இன்று அறிவிக்க உள்ளன. அதேபோன்று எம்மைச் சுற்றியுள்ள சிறு நாடுகளின் மத்திய வங்கிகளும் இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்குப் பங்களிக்கின்றன. சூழல் மற்றும் அபிவிருத்திக்கான அரபு மன்றம் முன் எப்போதும் இல்லாத வகையில் பொருளாதாரத்துக்கு உதவுவதற்கு முழு அளவிலான கருவிகளைப் பயன்படுத்தியுள்ளனர். இப்போது நாம் என்ன கருவியைப் பயன்படுத்தியுள்ளோம்? ஒன்றும் இல்லை. இதற்காக எமது மத்திய வங்கி எதையுமே செய்யவில்லை. மத்திய வங்கியும் திறைசேரியும் தான் நிதி மற்றும் அரசிறை வருமானக்கொள்கையைத் தயாரிக்கின்றன. ஆனால் அது நாட்டின் ஜனாதிபதியினது பொருளாதாரக் கொள்கைக்கு ஏற்ற வகையிலேயே அமைக்கப்பட வேண்டும்.

உங்களிடம் இதற்கென பல்வேறு கருவிகள் உள்ளன. அவற்றைப் பயன்படுத்த வேண்டும். எனினும் எமது மத்திய வங்கி எந்தவொரு கருவியையும் பயன்படுத்துவது இல்லை. அவர்கள் நித்திரையில் இருக்கிறார்கள். 150 பில்லியன் ரூபாவை வங்கிகளுக்கு வழங்குமாறு நாம் கூறினோம். இது வர்த்தகத்துறையின் பிழை அல்ல. முன்னர் இடம்பெற்ற தவறுகளின் காரணமாக அனைத்து நிறுவனங்களுக்கும் அரசு பெருந்தொகையை வழங்க வேண்டியுள்ளது. இப்போது இந்த நிதியை பிணையாக வைத்துக்கொண்டு வங்கிகளிலிருந்து இவர்களுக்கு கடன் பெறுவதற்கு இடமளியுங்கள். அப்போது அவர்களால் பொருளாதாரத்தைக் கொண்டு நடத்த முடியும். பணச்சுழற்சி இது தான். இது மிகவும் இலகுவானது. இது தான் பொருளாதாரத்தின் அடிப்படை. எனினும் நீங்கள் என்ன செய்கிறீர்கள். உங்களது தவறுகள் அரசின் மீது சுமத்தப்படுகின்றன. நீங்கள் இவ்வாறான விடயங்களை பார்ப்பதில்லை.

நிதி நிறுவனங்களுக்கு நடந்துள்ள நிலைமையைப் பாருங்கள். இந்த நிதி நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவது முகாமைத்துவம் செய்வது உங்களுடைய பொறுப்பு. நீங்கள் அதனைச் செய்வதும் இல்லை. லீசிங் நிறுவனங்களைப் பற்றி பார்ப்பதும் இல்லை. ஈ.ரி.ஐக்கு என்ன நடந்தது. இவற்றை நீங்கள் பிழையாகச் செய்து இறுதியில் அவர்களால் பணத்தைச் செலுத்த முடியாதுள்ளது. த பினான்ஸ் நிறுவனம் மூடப்பட்டுள்ளது. அது எமக்குத் தெரியாது. இப்போது அதற்கு எப்படி பணம் செலுத்துவது. அவற்றை முகாமைத்துவம் செய்வதும் இல்லை. இங்கு இருப்பவர்கள் அனைவரும் பொருளாதார நிபுணர்கள். இலட்சக் கணக்கில் சம்பளம் பெறுகின்றார்கள். என்ன செய்கின்றீர்கள்.

உங்களுக்கென்று ஒரு பொறுப்புள்ளது. உங்களுக்கு நான் ஒரு பொறிமுறையை வழங்கியிருக்கின்றேன். அதனை உங்களால் செய்ய முடியாதென்றால் எனக்கு ஒரு பொறிமுறையை சமர்ப்பிக்க உங்களுக்கு முடியும். ஏனைய நாடுகள் சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளை பாதுகாப்பதற்கு என்ன செய்கிறார்கள் என்று பாருங்கள். இங்கு என்ன செய்யப்படுகின்றது. நீங்கள் உங்களது கடமைகளைச் செய்தால் நான் இவ்வாறு பேச வேண்டிய தேவையில்லை என்று கோத்தாபய தெரிவித்தார், என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ப)

# தூர சேவை பஸ்கள் சேவையில் ஈடுபடாது

கொழும்பு, ஜூன் 17

ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 4 மணிவரையான காலப்பகுதியில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்கள் தூர சேவையில் ஈடுபடாது என்று இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அந்த நேரப் பகுதியில் இ.போ.ச. பஸ்களில் பயணிப்போரின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது என்றும், அதையடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-ரி2)

# மோதலில் ஒருவர் உயிரிழப்பு

அங்குலானை, ஜூன் 17

இருவருக்கு இடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை அங்குலானையில் இடம்பெற்றது.

இந்த நபர் பாலம் ஒன்றில் இருந்து தள்ளிவிடப்பட்டதால் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. மொட்டுமுல்லவையைச் சேர்ந்த 43 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார். பாலத்தில் இருந்து தள்ளப்பட்டவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். (ஐ-ரி2)

# இரண்டு சிறைகளில் அலைபேசிகள் மீட்பு

கொழும்பு, ஜூன் 17

வெலிக்கடை மற்றும் மகஸின் சிறைச்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களின் போது 5 கைத்தொலைபேசிகள் சிறைச்சாலை புலனாய்வு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மகஸின் சிறைச்சாலையின் விசேட பிரிவுகளில் 3 கைத்தொலைபேசிகளும், வெலிக்கடைச் சிறைச்சாலையில் தூக்குத் தண்டனைக் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கூடமான பி3 இல் இரண்டு கைத்தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

10 ஆண்டுகளாகவே

# 87 ஆயிரம் பேர்தான் பெண் தலைமைத்துவக் குடும்பங்களா?

## தரவுகளை மக்கள் ஆணை பெற்றவர்கள் வெளிப்படுத்தட்டும் என்கிறார் வேட்பாளர் உமா

யாழ்ப்பாணம், ஜூன் 17

வடக்கு கிழக்கில் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் எத்தனை பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் இருக்கின்றன என்பதை மக்கள் ஆணை பெற்றவர்கள்தான் வெளிப்படுத்த வேண்டும். 87 ஆயிரம் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் என்று இன்னும் 25 ஆண்டுகளுக்குப் பின்னரும் பேசிக்கொண்டு இருக்கப் போகின்றோமா, என்று ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட்பாளர் உமாச்சந்திர பிரகாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அவரிடம் வடகிழக்கில் இருக்கும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் முடிவடைந்து இவ்வளவு நாள்கள் கடந்துவிட்டன. வடக்கு கிழக்கில் குடும்பத்தை தலைமை தாங்கும் பெண்கள் 87 ஆயிரமாக இருக்குமா என்பது ஒரு கேள்வி.

அதில் எத்தனை பேர் இறந்துள்ளார்கள், எத்தனை பேர் தொடர்ந்து தங்களுடைய குடும்ப வாழ்க்கையைக் கொண்டு செல்லக்கூடியவர்களாக இருக்கின்றார்கள் என்ற கேள்வி இருக்கின்றது.

போர் முடிந்து 10 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் எத்தனை பேர் புதிதாகப் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்ற கேள்வியும் இருக்கின்றது.

இந்த 10 வருடத்தில் மக்கள் ஆணை பெற்றவர்கள்தான் அதற்கான சரியான தரவுகளைக் கொடுக்கவேண்டும்- என்றார். (ப-20)

# விதிமுறைகளை மீறினாரா சிறீதரன்?

கிளிநொச்சி, ஜூன் 17

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் வேட்பாளர் ஒருவர் தான் பயணம் செய்யும் வாகனத்தில் விளம்பரப் பதாதைகளை காட்சிப்படுத்த முடியும். வேட்பாளர் இன்றி பயணித்தால் தேர்தல் விதிமுறை மீறிய குற்றமாகும்.

இந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வேட்பாளருமான சி.சிறீதரனின் படம், கட்சிச் சின்னம், விருப்பிலக்கம் ஆகியவற்றைத் தாங்கியவாறு வவுனியாவில் இருந்து கிளிநொச்சி நோக்கி வேட்பாளர் இன்றி வாகனம் பயணித்த நிலையில் புளியங்குளம் பகுதியில் பொலிஸாரால் மறிக்கப்பட்டு பதாதைகளை நீக்கிவிட்டுச் செல்ல அனுமதித்துள்ளனர். (ஓ5,35)

# அறிவுறுத்தலைப் பின்பற்றாமையே சைபர் தாக்குதலுக்குக் காரணம்

*பாதுகாப்புச் செயலர் அறிவிப்பு*

கொழும்பு, ஜூன் 17



இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழு வழங்கிய அறிவுறுத்தல்களைப் பின்பற்றாமையாலேயே அரச நிறுவனங்களின் இணையத்தளங்கள் மீது சைபர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்ன தெரிவித்தார். பாதுகாப்பு அமைச்சில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் அண்மையில் அரச இணையத்தளங்கள் மீது சைபர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. சைபர் தாக்குதல்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் இலங்கை கணினி அவசர தயார் நிலை குழு வழங்கியது. பெரும்பாலான அரச நிறுவனங்கள், திணைக்களங்கள் அதனை பின்பற்றியுள்ளன. எனினும், சில அரச நிறுவனங்கள் அதனைப் பின்பற்றியிருக்கவில்லை.

இவ்வாறு அறிவுறுத்தல்களைப் பின்பற்றாமையின் காரணமாகவே அந்தத் திணைக்களங்கள் சைபர் தாக்குதலுக்கு இலக்கானது. இலங்கையில் இணையப் பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கை எடுப் பதற்கு இலங்கை கணினி அவசர தயார் நிலை குழு காணப்படுகின்றது- என்றார். (க)

## சிறுபான்மை

# கட்சிகளின் அழுத்தங்களுக்கு கோத்தா அரசில் இடமில்லை



## அடித்துக் கூறுகிறார் தயாசிறி

கொழும்பு, ஜூன் 17

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசில் தமிழ் முஸ்லிம் அரசியல் கட்சிகள் அழுத்தம் பிரயோகிப்பதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்த வேண்டிய தேவை கிடையாது. அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு சுதந்திரக் கட்சியில் 12 உறுப்பினர்களை உள்ளடக்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசின் பலவீனத்துக்கு ஒரு சில தமிழ் முஸ்லிம் கட்சிகளே பிரதான பங்கு வகித்தன. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல், வில்பத்து காடழிப்பு மற்றும் இனக் கலவரங்கள் ஆகியவற்றுடன் ஒரு சில முஸ்லிம் அரசியல்வாதிகள் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளார்கள். இவ்வாறனவர்களின் காரணமாகவே நல்லாட்சி அரசில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டன. இது ஏனைய தரப்பினருக்கும் பாதிப்பை ஏற்படுத்தின என்றும் அவர் தெரிவித்தார். (ப)

# ரணிலுக்கு 10 சஜித்துக்கு 20



## விமல் எதிர்வு கூறல்

கொழும்பு, ஜூன் 17

நாடாளுமன்றத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும், சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் வரலாறு காணாத படுதோல்வியைச் சந்திக்கும். ரணில் அணி வெறும் 10 ஆசனங்கள் மட்டுமே பெறும். அதேவேளை, சஜித் அணி 20 ஆசனங்களுக்கு மேல் பெறாது. இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுமக்கள் முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளரும், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுமக்கள் முன்னணிக்கு எந்தக் கட்சியுடனும் போட்டியில்லை. தாமரை மொட்டு அதிக ஆசனங்களுடன் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் வரலாற்று வெற்றியைப் பெறும். எதிர்க் கட்சிகள் எமது கட்சிக்கு எந்த விதத்திலும் சவாலாக அமையாது. அந்தக் கட்சிகள் தங்களுக்குள்ளேயே முட்டி மோதுகின்றன.

அரசுடனான 'டீல்' தொடர்பில் ஏட்டிக்குப் போட்டியாக கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன. 'டீல்' செய்து ஆட்சியமைக்க வேண்டிய தேவை 'தாமரை மொட்டு'க்கு இல்லை. தனித்து நின்று ஆட்சியமைப்பதே எமது பிரதான நோக்கம். அது நிறைவேறியே தீரும் என்றார். (க)

# சிறைச்சாலை அதிகாரிகளுக்கு திடீர் இடமாற்றம்

கொழும்பு, ஜூன் 17

சிறைச்சாலை அதிகாரிகள் 24 பேர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். சிறைச்சாலை அமைச்சின் செயலரின் பரிந்துரையின் அடிப்படையில் தேர்தல் ஆணைக்குழுவின் ஒப்புதலில் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இடமாற்றப்பட்டவர்களில் வெலிக்கடை, மெகஸின், போஹம்பர, பதுளை, வாரியப்பொல, அக்குணு கொபொலஸ்ஸ, நீர்கொழும்பு ஆகிய சிறைச்சாலைகளின் அதிகாரிகள் உள்ளடங்குகின்றனர். (ஐ,ரி1)

# வெலிசறை முகாமை திறப்பதற்குத் தீர்மானம்

கொழும்பு, ஜூன் 17

கொரோனாத் தொற்றுக் காரணமாக மூடப்பட்ட வெலிசறைக் கடற்படை முகாமை எதிர்வரும் தினங்களில் திறக்க எதிர்பார்த்துள்ளோம் என்று கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சுகாதார வழிமுறைகளுக்கு அமைய முகாம் திறக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுதுவெல்ல பிரதேசத்தில் கொரோனா ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்படையினர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியதை அடுத்து, வெலிசறை கடற்படை முகாமில் இருந்த கடற்படையினர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகினர். அதையடுத்துக் கடந்த ஏப்ரல் மாத இறுதியில் கடற்படை முகாம் முற்றாக மூடப்பட்டது. (ஐ-ரி1)

# ஈ.ரி.ஐ. முதலீட்டு நிறுவனத்தின் பணிப்பாளர்களுக்குப் பிடியாணை!

கொழும்பு, ஜூன் 17

எதிரிசிங்க நம்பிக்கை முதலீட்டு நிறுவனத்தின் பணிப்பாளர்கள் நால்வருக்கு நீதிமன்று பிடியாணை பிறப்பித்துள்ளது. நீதிமன்றில் அவர்கள் முன்னிலையாகாததை அடுத்தே அவர்களுக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எதிரிசிங்க நம்பிக்கை முதலீட்டு நிறுவனத்தின் பணிப்பாளர்களான ஜீவக எதிரிசிங்க, நாலக எதிரிசிங்க, அசன்க எதிரிசிங்க, தீபா எதிரிசிங்க ஆகியோருக்கே பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவர்களை உடனடியாகக் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

நிறுவனத்தின் வைப்பாளர்களின் பணத்தை மீள செலுத்தாமைக்கு எதிராக நிதி வைப்பிலிட்ட 3 பேரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் ஒக் டோபர் மாதம் 8 ஆம் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி1)

# இருவர் கைது

கொடிகாமம், ஜூன் 17

மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர். யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை இவர்கள் கைது செய்யப்பட்டனர். (ஐ-159)

# ஐ.தே.கவுடன் சமர் இல்லை
# மொட்டுடனே எங்கள் போர்
## சஜித்தின் அணிச் செயலர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

அனைத்துத் தரப்புக்களையும் பகைத்துக்கொண்டு, வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் இந்த அரசு பலவீன மாகச் செயற்பட்டு வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டணியொன்றை அமைக்க வும், பிரதமர் வேட்பாளராக சஜித் பிரேமதாசவைக் களமிறக் கவும், அவருக்குத் தேவையான செயலாளர் ஒருவரை நியமிக்க வும் ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுவே ஒப்புதல் வழங்கியது. ரணில் விக்கிரமசிங்க வழங்கிய கடிதமும் இருக்கின்றது. நாம் தவறிழைக்கவில்லை. எம்மை நீக்கி ரணில் தரப்பே தவறிழைத் துள்ளது. இதற்கு எதிராக நீதி மன்றம் சென்றோம். தீர்ப்பு வரும். ஐக்கிய தேசியக் கட்சி எனக் கூறிக் கொள்ளும் தரப்பு எமக்கு பிரதி வாதி அல்ல.

மொட்டு கட்சியினரே எமது பிரதிவாதிகள். அவர்களுடனேயே எமக்கு அரசியல் சமர் இருக்கின் றது. நாட்டு மக்களில் பெரும் பாலானவர்கள் எமது பக்கமே இருக்கின்றனர். ரணில் தரப்பு என்பது கட்சியின் பெயரை மட்டுமே வைத்துக்கொண்டுள் ளது. கிராம மட்டத்திலும் எமக்கான ஆதரவே இருக்கின் றது. கடந்த 6 மாதங்களில் தம்மால் முடியாது என்பதை அரசு நிரூபித்துவிட்டது.

விவசாயிகளுக்கு உரத்தை வழங்கவில்லை. அரிசிக்கு உரிய கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க முடியாமல்போனது. அரச ஊழியர்களின் சம்பளம் பறிக்கப்படுகின்றது. ஆகமொத் தத்தில் ஏழைகளிடமிருந்து பறித்து செல்வந்தர்களுக்கு வழங்கும் வகையிலேயே அரசின் வரிக் கொள்கை அமைந்துள்ளது. நாட்டில் சட்டத்தின் ஆட்சி நிலவவில்லை. தேசியப் பாது காப்பை முன்னிலைப்படுத்தியே ஜனாதிபதி ஆட்சிக்கு வந்தார். ஆனால், நாட்டில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடக்கின் றன. தேசிய பாதுகாப்பு எங்கே?, என்று கேள்வி எழுப்பினார். (ப)

# கட்டுக்கதைகளை கட்டவிழ்க்கிறார்கள்
## மனோ கவலை



கொழும்பு, ஜூன் 17

சஜித் தலைமையிலான கூட் டணியிலிருந்து விலகுவ தாக இணையத் தளங்க ளில் வெளியான செய்திக ளில் உண்மையில்லை. கொழும்பைச் சேர்ந்த அமைச்சர் மற்றும் முன் னாள் அமைச்சர் ஆகியோ ரின் இரகசியக் கும்பல்க ளால் நடத்தப்படும் இணை யத் தளங்கள் ஊடாகவே இவ்வா றான செய்திகள் கசியவிடப்ப டுகின்றன. இவ்வாறு முன் னாள் அமைச்சரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரு மான மனோ கணேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய தேசியக் கூட்டணியில் சேரும் போது அல்லது விலகும்போது, கூட 'எடுத்தேன் கவிழ்த்தேன்' என ஒரேயொரு விடயத்தை மாத்திரம் காரணமாக வைத்துகொண்டு, நான் சேருவதும் இல்லை. பிரிவதும் இல்லை. நாம் மிகவும் பொறுமையாக, நிதானமாகவே எங்கள் முடிவுகளை எடுக்கி றோம். வேகம் இருப்பதுபோல் எமக்குள் விவேகமும் இருக்கிறது.

நான் நாளுக்கு ஒரு அணி மாறிக்கொண்டு இருந்தால், சிங்கள மக்கள் எம்மைச் சூழ்ந்து வாழும், இந்நாட்டின் இந்த பிரதேசத்தில் எனக்கு மரியாதை இருக்காது. அதனால், நான் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களுக் கும் மரியாதை இருக்காது. தேர்தலை எதிர்நோக்கும் இவ்வேளையில், இவர்கள் இந்த மரியாதையையே திட்டமிட்டுக் குழப்ப முயல்கின்றனர்.

இந்நாட்டில் செயற்படுகின்ற எந்தவொரு சிறுபான்மைக் கட்சித் தலைவர்களை விடவும், எனக்கு அன்றே வந்த அமைச்சுப் பதவிகளையும் உதறித் தள்ளிவிட்டு, ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் போது, அவருடன் மிகவும் பொறுமையு டன் பதினைந்து வருடங்கள் இருந்த ஒரே கூட்டுக்கட்சி தலைவர் நான்தான்.

இன்று எங்கள் பொறுமைக்கு முடிவு வந்து விட்டதால், நாங்கள் ஒரு கட்சியாக, கூட்ட ணியாக புதிய தேசிய கூட்டணியை நிறுவி அதில் அங்கம் வகிக்கிறோம். அதன் தலை வராக சஜித் பிரேமதாச பதவி வகிக்கின்றார். அவர் மீது எங்களுக்கு நம்பிக்கை இருக் கின்றது.

இன்று இந்நாட்டில் ஆளும் பொதுஜன முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் பார்த்து பயப்படும் அணியாக எமது ஐக்கிய மக்கள் சக்தி நிலவுகிறது. அதனா லேயே நாள்தோறும் அவதூறுகளை இந்த இரண்டு கட்சியினரும் எம்மீது எடுத்து வீசுகிறார்கள். ஐக்கிய தேசிய முன்னணி யில் இருந்த வேளையில், கடந்த கொழும்பு மாநகரசபைத் தேர்தலின் போது கூட இதே இணையத்தளம் என் மீது களங்கம் கற்பித்து அபாண்ட பொய்ச் செய்திகளை எழுதியது.

நாமே உருவாக்கியுள்ள, புதிய தேசிய வெற் றிக் கூட்டணியின் நிறுவுனர்களில் நானும் ஒரு முதன்மையாளர். இதில் இருந்து விலகும் தேவை எமக்கு இல்லை. எதிர்வரும் தேர்தலில், நாம் வெற்றிவாகை சூடுவோம், என்றார். (ப)

# ஹூலின் நிலைப்பாடு ஆணித்தரமானது அதனாலேயே அவர் மீது விமர்சனங்கள்
## இராதாகிருஷ்ணன் ஆதரவுக் கரம்

கொழும்பு, ஜூன் 17



தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்னஜீவன் ஹூல், அரசை விமர்சிக்கவில்லை. மாறாக தனது நிலைப்பாடு களையே அவர் ஆணித்தர மாக குறிப்பிடுகிறார். அதனால் அவர் எதிரியா கப் பார்க்கப்படுகின்றார். தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களை விமர்சிப்பதை விடுத்து, அவர்களால் முன் வைக்கப்ப டும் யோசனைகளை அரசும் அமைச்சர்களும் நிறைவேற்றவேண்டும். தேர்தல் நியாயமாக நடை பெறுவதற்கான ஒத்துழைப்பை அனைவரும் வழங்க வேண்டும். அனைவரும் வாக்குரிமையை பயன்ப டுத்தவேண்டும். இவ்வாறு மலையக மக்கள் முன்ன ணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளரு மான வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹட்டனில் உள்ள மலையக மக்கள் முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனாத் தாக்கத்தால் தேர்தல் பரப்புரையை முன்னெடுப்பதற்குப் பல கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டுள்ளன. சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி எவ்வாறு பரப்புரை முன்னெடுப்பது என்பது தொடர் பில் கட்சிச் செயற்பாட்டாளர்களுக்குத் தெளிவுப டுத்தப்பட்டது. பெரிய கூட்டங்களை இம்முறை நடத்த முடியாது. வீடுகளுக்குச் சென்றே பரப்புரை செய்யவேண்டும்.

தேர்தல் ஆணைக்குழு அரசுக்குச் சார்பாக எதையா வது சொன்னால் அவர்களைப் பாராட்டுவதும், விமர்சனங்களை முன்வைத்தால் ஆளுங்கட்சியன ரால் அதற்கு எதிராகக் கருத்துகளை முன்வைக்கும் நிலையும் தற்போது நீடிக்கின்றது- என்றார். (ப)

# ஐ.தே.க பதவி ஆசை காட்டியது அதை நான் தூக்கி எறிந்தேன்
## இப்படிச் சொல்கிறார் வடிவேல் சுரேஸ்

கொழும்பு, ஜூன் 17

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடம் என்னை அழைத்து, கட்சியினதும், சங்கத்தின தும் உயர் பதவிகளை வழங்குவதாகவும், தேர்தலில் யானைச் சின்னத்தில் போட்டி யிடுமாறும் கேட்டுக்கொண்டனர். ஆனால் அதனை நான் ஏற்க மறுத்துவிட்டேன். இவ் வாறு ஒக்டோபர் அரசியல் சதிப் புரட்சியில் அந்தர்பல்டி அடித்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ரணிலுக்கும், சஜித்துக்கும் இடையிலான தலைமைத்துவப் பிரச்சினையால் நானும் எனது மக்களும் பலிகடாக்களாக்கப்பட்டுள்ளோம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடம் என்னை அழைத்து, கட்சியினதும், சங்கத்தின தும் உயர் பதவிகளை வழங்குவதாகவும், தேர்தலில் யானைச் சின்னத்தில் போட்டியி டுமாறும் கேட்டுக்கொண்டனர். இந்தக் கோரிக்கைகளை, பதுளை மாவட்ட மக்களி டம் முன்வைத்தேன். அவர்கள் அதனை நிராகரிக்குமாறு உறுதியாகக் கூறிவிட்டனர். ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்புமனுவில் கைச்சாத்திடுவதற்கு ஒரு சில தினங்களுக்கு முன் ஐக்கிய தேசியக் கட்சி தலைமைப்பீடம் என்னை அழைத்து, எனக்கு வழங்கப்போகும் உயர் பதவிகள் குறித்து மீளவும் கோரிக்கை களை வைத்தது. நான் மறுத்ததும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து என்னை விலக்குவதாக, ரணில் விக்கிரமசிங்க எச்சரித் தார்.

எனக்கெதிராக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடம் வழக்குகளை தாக்கல்செய் தது. மேலும் எனது நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் வகையிலும், எனது அரசியல் வளர்ச்சியைத் தடுப்பதற்கும் சதித்திட்டங்களை யும், சூழ்ச்சிகளையும் திட்ட மிட்டு மேற் கொண்டு வருகின்றது- என்றார். (ப)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 17.06.2020 இல் வெளியிடப்பெற்றது.